பக்கங்கள் : நான்கு

# உதயன்

விலை ரூபா 10.00


www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 04 வெள்ளிக்கிழமை (16.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 83

### சமாதானப் பேச்சுக்கு அழைத்து வருவதற்காக

# விடுதலைப் புலிகளுடன் நேரில் பேசுவதற்கு பிரிட்டிஷ் அரசு தயார் என அறிவிப்பு

## வெளிவிவகார இணை அமைச்சர் கிம் ஹவெல்ஸ் தகவல்



கொழும்பு,பெப்ரவரி 16

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப் பட்டுவந்த சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்காக- பேச்சு மேசைக்கு விடுதலைப் புலிகளை அழைத்து வரும் முயற்சியில், அவர்களுடன் நேரில் பேசுவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் தயாராக உள்ளது.

இவ்வாறு அறிவித்திருக்கிறார் பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொது நலவாய விவகாரங்களுக்கான இணை அமைச்சர் கலாநிதி கிம் ஹவெல்ஸ்.

விடுதலைப் புலிகளுடன் பிரிட்டன் நேரடியாகப் பேசுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சேபம் தெரிவிக்கவில்லை என்றும் - இணை அமைச்சர் தகவல் வெளியிட்டதாக சர்வதேச செய்தி ஊடகம் ஒன்று தெரிவித்தது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் தாக்குதல் சிப்பாய் பலி; 11 பேர் காயம்

கொழும்பு,பெப்.16

முகமாலை முன்னரங்க நிலைகள் மீது நேற்றுமுன்தினம் மாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். 11 படையினர் காயமடைந்தனர்.

தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் இதனைத் தெரிவித்தது.

படையினர் பல்குழல் பீரங்கி தாக்குதலை நடத்தி தாக்குதலை முறியடித்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1)

## சரண் அடைவோரை தங்க வைப்பதற்கு யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு நிலையம்

### பிரதம நீதியரசர் சிறைச்சாலை ஆணையாளருக்கு பணிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைபவர்களை பராமரிக்க புனர்வாழ்வு நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான பணிப்புரையை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா புனர்வாழ்வு ஆணையாளர் சுகத் கம்லத்துக்கு நேற்று விடுத்துள்ளார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக கடந்த சில தினங்களாக 14 பேர்யாழ்.பொலிஸ் நிலையத்தில் சரண் அடைந்திருந்தனர். யாழ். சிறைச்சாலையில் உள்ள இடநெருக்கடியைக் கருதி அவர்கள் தெற்கில் உள்ள புனர்வாழ்வு நிலையம் ஒன்றுக்கு மாற்றுவது குறித்து உத்தியோகப்பற்றற்ற முறையில் ஆராயப்பட்டு வந்ததாக மக்கள் தரப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தை மிகக் கடுமையாக அரசு கையாளப் போவதாக அறிவிப்பு

கொழும்பு, பெப்.16

பயங்கரவாதிகளை இலங்கை அரசு கடுமையாகக் கையாளப் போவதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹன்ன சீனாவில் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் இலங்கைத் தீவு முழுவதும் தற்கொலைக் குண்டுதாரிகளை பெரும் எண்ணிக்கையில் விதைத்துவிட்டிருக்கின்றனர். மத்திய கிழக்குடன் ஒப்பிடுகையில் இது மிக அதிகம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளருமாகிய கொஹன்ன, இம்மாத இறுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவில் மேற்கொள்ளவிருக்கும் உத்தியோக பூர்வ விஜயத்துக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக பீஜிங் சென்றுள்ளார்.

பீஜீங்கில் செய்தியாளர் மாநாட்டில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இரவு ஊரடங்கு இன்று நீக்கம்

யாழ்ப்பாணம்,பெப்.16

சிவராத்திரி தினத்தை ஒட்டி இன்று இரவு ஊரடங்கு முழுமையாக நீக்கப்படுவதாக பலாலி படைத்தலைமையக ஊடகப்பிரிவு நேற்றிரவு தெரிவித்தது.

பக்தர்கள் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க வசதியாக ஊரடங்கு நீக்கப்படுவதாக ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்தது. (அ-1)

## பஸ்களுக்கான உதிரிப்பாகங்கள் கிடையாவிடில் மாத இறுதியுடன் சேவைகள் நிறுத்தப்படும் அபாயம்

### போக்குவரத்துச் சபை முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.16

குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கான உதிரிப்பாகங்கள் இன்னும் சில நாள்களில் வந்த சேரவில்லையெனில் இம்மாத இறுதியுடன் சகல பஸ் சேவைகளும் ஸ்தம்பிக்கும் அபாயம் உண்டாகியுள்ளது.

போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய பொது முகாமையாளர் எஸ்.கணேசபிள்ளை இத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பஸ்களுக்குத் தேவையான ரயர்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் கிடைக்காவிட்டால் சீரான பஸ் சேவையை நடத்த முடியாத நிலை ஏற்படும்.

தற்சமயம் 66 பஸ்கள் சேவையில் உள்ளன. யாழ்.சாலையில் 44 பஸ்களும் பருத்தித்துறை சாலையில் 13 பஸ்களும் காரைநகர் சாலையில் 9 பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

உதிரிப்பாகங்கள் பழுதடைந்துள்ளதால், அடுத்த வாரம் தொடக்கம் யாழ். சாலையில் 8 பஸ்களையும், பருத்தித்துறை சாலையில் 3 பஸ்களையும் காரைநகர் சாலையில் 2 பஸ்க்ளையும் மட்டுமே சேவையில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டைக் காட்டிக்கொடுத்த தினமாக பெப். 22 ஐ அனுஷ்டிக்க அழைப்பு

கொழும்பு, பெப்.16

யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு ஐந்து வருடங்கள் நிறைவடையும் இம்மாத 22ஆம் திகதியை நாட்டைக்காட்டிக் கொடுத்த தினமாக அனுஷ்டிக்க ஜே. வி. பி. தீர்மானித்துள்ளது. அன்றையதினம் கொழும்பு ஹைட் பார்க்கில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

கொழும்பு தேசிய நூலகத்தில் நேற்று தேசிய அமைப்புகளின் சம்மேளனம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பி. நாடாளு (04 ஆம் பக்கம் பார்க்க)

## மலையக தமிழ் ஆசிரியர் மூவர் இரகசியப் பொலிஸாரால் கைது!

### புலிகளுடன் தொடர்பு என்ற கோணத்தில் விசாரணை

கொழும்பு,பெப்.16

இராகலைப் பிரதேசத்தில் இருந்து மூன்று தமிழ் ஆசிரியர்கள் இரகசியப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் - என்று கூறப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட மூவருமே மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு அங்கேயே ஆசிரியர்களாகத் தொழில் செய்பவர்கள். சூரியகாந்தித் தோட்டத்தைச் சேர்ந்த செயசீலன், இராகலை தோட்டத்தைச் சேர்ந்த மகேந்திரன், இராகலை பஜாரைச் சேர்ந்த சுகேசனன் ஆகிய மூவருமே கைது செய்யப்பட்ட ஆசிரியர்களாவர். இவர்களுள் மகேந்திரன் என்பவர் திருமணமானவர். இரண்டு பிள்ளைகளின் தந்தை.

நேற்றுமுன்தினம் இரவு 11.00 மணியளவில் இராகலைக்கு வந்த இரகசியப் பொலி (04 ஆம் பக்கம் பார்க்க)

## கொலை அச்சுறுத்தல் குறித்து ஜயலத் ஐ.நாவுக்கு முறைப்பாடு

கொழும்பு, பெப்.16

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவிற்கு அண்மையில் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் தொடர்பாக அவர் ஐ. நா. சபைக்கும் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்துக்கும் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அரசே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இதுபற்றி அவர் 'உதயனு' க்குத் தெரிவித்ததாவது:-

எனக்கு இணையத்தளம் மூலம் அண்மையில் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. நான் சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கொழும்பில் இடம்பெற்று வருகின்ற ஆள்கடத்தல்களை எதிர்த்தும் குரல் கொடுப்பதே இதற்குக் காரணம்.

இது எனது சிறப்புரிமை மீறல் பிரச்சினை என்றபடியால் சபாநாயகரிடம் முறைப்பாடு செய்தேன். சபாநாயகர் இது தொடர்பாக விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா (04 ஆம் பக்கம் பார்க்க)

### ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட

## மக்கள் குடியிருப்புகள் மீது நாயாறில் விமானக் குண்டு வீச்சு

கிளிநொச்சி,பெப்.16

முல்லைத்தீவு, நாயாறுப்பகுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மிக்-27 ரக விமானங்கள் குண்டு வீச்சை நடாத்தியுள்ளன. இத்தாக்குதலில் மூன்று பொது மக்கள் காயமடைந்தனர் என்றும் -

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருந்த குடியிருப்புக்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது. இத்தாக்குதலை அடுத்து நாயாறுப் பகுதியை நோக்கி மணலாறு இராணுவ முகாமில் இருந்து ஆட்லறி மற்றும் பல்குழல் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-1-ரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருகோணமலை
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில்
கல்வி கற்று 2006ஆம் ஆண்டு தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சையில்
148 புள்ளிகளைப் பெற்ற
திரு. திருமதி
இராஜரெட்ணம் பிறேமராணி
தம்பதியரின் அன்புப் புதல்வி

**செல்வி இ.ஆதவி**

(மாவட்ட மட்டம் 76 பாடசாலை மட்டம் 10)

மேலும் உயர் கல்வி கற்று சிறந்த பிரஜையாக விளங்க இறைவன் ஆசியுடன் கூடிய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

*206 A, செங்குந்த வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*திருநெல்வேலி.*

வாழ்துவோர்:
திரு. திருமதி ரகுமார்,
ர.கஜநீதன், ர.கஜானன்.

(57990)

## Congratulations



We congratulate

**Rev Jason J.Selvaraja**

As he receives the honour as a Fellow of the Institute of Theological Education (FITE)
In recognizing his contribution for the growth of the Church and Theological Education in Sri Lanka.
By the
The Faculty of South Asia Institute of Theology (SAIT)
On February 17, 2007
In Sri Lanka.
Also we congratulate
Rev.Andrew Wills (UK) & K. Abraham (Australia)
Who too are receiving the same award

**The Faculty & Students**
**Colombo Theological Seminary**
**189, Dutugemnunu street, Kohuwela**
**Colombo Theological Seminary – Jaffna Study Centre**
**32/1 Vidhan's Lane, Jaffna.**

(57990)

## அரசாங்க அறிவித்தல்

### மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை

### மீள்கேள்வி அறிவித்தல்

### பால் தவிர்ந்த சமைத்த/ உலர் உணவு வழங்கல் 2007

மேற்படி விடயமாக இதே பத்திரிகையில் 20.10.2006 ஆம் திகதி வெளிவந்த பத்திரிகை விளம்பரத்திற்கு கவனம் செலுத்துவதுடன் அதில் குறிப்பிட்ட அட்டவணையிலுள்ள வைத்தியசாலைகளுக்கு 01.04.2007 முதல் 31.12.2007 வரையான காலப் பகுதிக்கு சமைத்த / உலர் உணவு வழங்கல் ஒப்பந்த சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக மீளக்கேள்வி கோரப்படுகிறது. கேள்விப் படிவங்களை உரிய கட்டணங்களைச் செலுத்தி 01.03.2007 வியாழக்கிழமை பி.ப. 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் விவரம் எழுதப்பட்ட சீல் வைக்கப்பட்ட உறையிலிட்டு 02.03.2007 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு முன்பாக இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிரதி மாகாண பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(சி/52043)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்களான
செல்வி சுதமதி மயில்வாகனம், திருமதி ம. செல்வசுந்தரம்
ஆகியோரின் அன்புத்தாய்

**திருமதி செல்வரத்தினம் மயில்வாகனம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(58225)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பிரதிஅதிபர்
க.பத்மகாந்தன் அவர்களின் மகனும்
முன்னாள் சிரேஷ்ட மாணவத் தலைவருமான

**அமரர் சஞ்ஜீத்**

அவர்களின் திடீர் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(58224)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

**ஜெயராசசிங்கம் நித்தியலட்சுமி**

(காரைநகர்)

மலர்வு 22-07-1955 உதிர்வு 17-01-2007

கடந்த 17.01.2007 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (16.02.2007) வெள்ளிக்கிழமை காலை 9மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தந்தி,தொலைபேசி,தொலைநகல் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது நன்றி.

*40/4,கிழக்கு புகையிரத ஒழுங்கை,*
*கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.

(58205)

## வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் VOGT

### பதவி வெற்றிடம்/ஆட்சேர்ப்பு

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், சமூக சேவைத் திணைக்களத்தில் 2004 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட போரூட் பங்காள நிறுவனமாக இயங்கி வருகின்றது. இந்நிறுவனத்திற்கு பின்வரும் தகைமையுடைய வடமராட்சியில் நிரந்தரமாக வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்டது. இருபாலரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி நிலை - கள உத்தியோகத்தர்
ஒருவர் மட்டும்

தகைமைகள்
1) G.C.E. A/L சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட
2) ஆங்கில அறிவு, கணனி அறிவு
3) ஏனைய தகைமை

சேவையின் தன்மை - கிராம அமைப்புக்களுடனும் மக்களுடனும் சமூக அணி திரட்டும் ஆற்றலை மேம்படுத்தும் திறன், பேச்சாற்றல், தொடர்பாடல், ஆவணப்படுத்தல்,அறிக்கை சமர்ப்பித்தல் என்னும் திறன்களைக் கொண்டிருந்தல்

விண்ணப்பதாரி தமது சுயவிவரக் கோவையுடன் விண்ணப்பங்களை *தலைவர், போரூட், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், விக்னேஸ் வரா வீதி, நெல்லியடி, கரவெட்டி* என்ற முகவரிக்கு 28.02.2007 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

(சி/52045)

## படிவம்

தேசிய சேமிப்பு வங்கியின் முகாமைத்துவப் பயிற்சியாளர் தரம் III - வகுப்பு II க்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

முடிவுத்திகதி
28.02.2007

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.

## வாடகைக்கு

விதானையார் வீதி, சுண்டிக்குளியில் 3 அறைகளும் சமையலறை,ஹோல், கிணறு ஆகியவை உள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு : S.S.நாதன்
16/3 விதானையார் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.


## Diploma in Auto CAD

Speed Batch Only 25 Hours

இவ்வார இறுதியில்!

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்!

மேலதிக விபரங்களுக்கு நேரில்!

CB Computer Academy
Station Road, Kondavil. ☎:-021-4590291


## விற்பனைக்கு

கைதடிச் சந்தியில் இருந்து 100 M தூரத்தில் பொது நூல் நிலைய வீதி, கைதடி தெற்கில் வீட்டுடன் கூடிய 3½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

கைதடி தெற்கு,
பொது நூல் நிலைய வீதி,
கைதடி.

தொடர்பு :
ஆ.கணேசமூர்த்தி,
T.P. 0779582316 க.மயூரதன்

## ஆசிரியர் தேவை

வயலின்/ வீணை வீட்டில் வந்து
கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.
தொ.பே இல. 5099

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

FACULTY OF ARTS

**COMMENCEMENT OF LECTURES**

POST GRADUATE DIPLOMA IN EDUCATION
FULL TIME - 2006 &
PART TIME - I COURSES - 2006/2007

The Lectures for the above courses will commence as follows:
PGDE - Full Time - 19.02.2007 at 9.00 a.m.
PGDE - Part Time 1 - 24.02.2007 at 9.00 a.m.

Venue : Department of Education,
University of Jaffna.

REGISTRAR
15.02.2007

ஆடுகளத் திறப்புவிழா

அச்சுவேலி மத்திய விளையாட்டுக் கழகத்தின் புதிய ஆடுகளத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெறும்.


பொருளியல்
மாபெரும் கருத்தரங்குத் தொடர்
1st in Commerce
ஆரம்பம்-17.02.2007(sat. 11 am)
ஆசிரியர்:
G.Gnanam(B.A.Hons-Eco.Spl.)
நடைபெறும் இடம்:
DCM யாழ்ப்பாணம்.
HIGHER ECONOMIC CENTRE
(HEI) 50/22, செட்டித்தெரு, நல்லூர்.
A/L 2007 Paper Class sat.(2-3)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

(16.02.2007)

**நா.ராதாகிருஷ்ணன்**

(சிரேஷ்ட சுங்க அத்தியட்சகர்)

தோற்றம் : 20.07.1958 இறைவனடி : 26.02.2006

*அன்போடும் பாசத்தோடும் எம்மோடு இணைந்து இறைவனுக்கு தொண்டுபுரிந்தோர் இறைவனடி சேர்வர். ஏனெனில் அவர்கள் செய்த நன்மை அவர்களைப் பின்தொடரும்.*

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பருத்தித்துறை பெரிய பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் ஆறாது நின்பிரிவுத்துயர்.

பரிபாலனசபை,
கொட்டடி சித்தி விநாயகர் கோயில்,
பருத்தித்துறை.

செயலாளர்,
க.நாகேந்திரன்.

(சி/52023)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி

**சாரங்கி ரஜீந்திரன்**

(மாணவி, யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

தோற்றம் 10.04.1992 மறைவு 16.02.2003

குயில் கூவும் நேரம் உன் குரல் கேட்குது
சாரங்கி - எம்
குலம் விளங்க உதித்த குல விளக்கே
சாரங்கி!
என் எழுத்தில் திறங்காட்டி விளங்கிய எம்
குட்டி சாரங்கி!
எங்கம்மா சென்றீர் எம்மை விட்டு சாரங்கி!

பி.ரஜீவன்(நாதஸ்வரம்)
"சாரங்கம்"

*393, கோயில் வீதி,*
*நல்லூர்.*
*021 2229125*

- குடும்பத்தினர்.

(58209)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் தேவிகாராணி



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தேவிகாராணி14.02.2007 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரவணமுத்து சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற Indian Overses Bank கணக்காளர், கொழும்பு) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம் கந்தையா (இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர்) - சொர்ணம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற சரணவமுத்து - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மைதிலி, மிருணாளினி, மந்தாகினி(U.K), ஸ்காந்தரூபன்(பிரான்ஸ்), சுபாங்கி(கனடா) ஆகியோரின் அருமைத் தாயும் கலைஅரசன்(கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், உடுவில்), சிவாஜி, ஸ்ரீஸ்கந்தராஜா (U.K), சஞ்சலா (பிரான்ஸ்), வரதராஜன்(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கலைப்பிரியா, பவித்திரா, கீர்த்திகா, தாமரா, சரணியன் (இலங்கை), ஜிஸ்ணு(கனடா), பங்கஜன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் இரத்தினவேல், சண்முகவேல், காலஞ்சென்ற சகுந்தலா தேவி, அகிலராணி, ரஞ்சிதமலர் ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகராஜா, தியாகராஜா, பாக்கியம் சிவஞானம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(17.02.2007) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ரூபஸ்தான்,*
*கணேஸ்வரம்,*
*அளவெட்டி.*

தகவல்:
ச.சுப்பிரமணியம்
(கணவர்)

(58232)

### திருமதி சின்னப்பு எலிசபெத் ஆச்சிப்பிள்ளை

(எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை விசுவாசி)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பு எலிசபெத் ஆச்சிப்பிள்ளை அவர்கள் 14.02.2007 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்புவின் அன்பு மனைவியும் மகேஸ்வரி, கணபதிப்பிள்ளை, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் தேவராசா, இரட்ணேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற நேசராசா மற்றும் பத்மாவதி, காலஞ்சென்ற புலேந்திரன் மற்றும் பொன்னுத்துரை,சற்குணம்,செல்வரட்ணம், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.02.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*242/5, மானிப்பாய் வீதி,*
*ஓட்டுமடம்.*

தகவல்:
சி.பொன்னுத்துரை
(மருமகன்)

(58233)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

# கோமாளிகளின் அரசியல்

தென்னிலங்கையின் அரசியல் எவ்வளவு கோமாளித்தனமானது என்பதை மீள ஒரு தடவை நிரூபித்திருக்கின்றார் அனுரா பண்டாரநாயக்கா.

அமைச்சர் பதவி பறிக்கப்பட்டதை அடுத்து "அந்தக் கோமாளிகளின் களியாட்டத் திருவிழா விலிருந்து (Carnival Of Clowns) வெளியே வந்தமைக்காக மிகவும் மகிழ்கிறேன்." - என்று தெரிவித்திருந்த அனுரா பண்டாரநாயக்கா, திரும்பவும் ஐந்து நாட்களுக்குள் 'அந்தர் பல்டி' அடித்து மீண்டும் அதே கோமாளிகளின் களியாட்டத் திருவிழாவுக்குள் போய் விழுந்து விட்டார்.

அனுரா பண்டாரநாயக்காவைப் பொறுத்தவரை இந்தக் குத்துக்கரணங்கள் ஒன்றும் புதியவை அல்ல. அவரது அரசியல் பாதையில் அடிக்கடி நடக்கும் நிகழ்வுதான் அது. என்றாலும் ஐந்து நாள்களுக்குள் இப்படி ஒரு முழுக் குத்துக்கரணத்தை எல்லோராலும் நம்பமுடியாமல்தான் இருக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஸ்தாபித்தவர் அனுராவின் தந்தை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா. கடந்த வருடம் வரை - கடந்த சுமார் அரைநூற்றாண்டு காலமாக - அக்கட்சியின் தலைமை அவர்களது குடும்பத்தின் சொத்துரிமையாகவே இருந்து வந்தது. முதலில் அனுராவின் தந்தையிடம். அவர் இறக்க, அனுராவின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம். பின்னர் அவரிடமிருந்து அனுராவின் அக்கா சந்திரிகா குமாரதுங்கவிடம்.

கடந்த ஆண்டுதான் கட்சியின் தலைமை புதிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவினால், பண்டாரநாயக்கா குடும்பத்திடமிருந்து கை மாறியது.

அனுரா பண்டாரநாயக்கா இந்த நாட்டின் இரு முன்னாள் பிரதமர்களின் ஒரே மகன். இலங்கையில் முன்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவின் ஒரே சகோதரர். அது மட்டுமல்ல. இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் நீண்ட காலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்போரின் வரிசையில் அனுராவுக்கும் இடம் உண்டு. முப்பது ஆண்டுகளாக அவர் எம். பியாக இருக்கிறார். சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் உட்பட முக்கிய அமைச்சர் பதவிகளை வகித்தவர்.

ஆனாலும் அடிக்கடி கட்சி மாறும் 'ஆயாராம் காயாராம்' போக்கு அனுராவின் அரசியல் வாழ்வோடு பின்னிப் பிணைந்தே வந்துள்ளது. ஆனால் இப்படிக் குறுகிய காலத்துக்குள் - ஐந்து நாட்களுக்குள் - அவர் 'பல்டி' அடித்தமைதான், அவரைப் பெரிய கோமாளியாக்கியிருக்கின்றது.

1977இல் நுவரெலியா - மஸ்கெலியா தேர்தல் தொகுதியிலிருந்து இரண்டாவது உறுப்பினராக நாடாளுமன்றுக்குத் தெரிவாகியதன் மூலம் பிரிய தர்ஷி அனுரா சொலமன் டயஸ் பண்டார நாயக்காவின் அரசியல் பிரவேசம் இலங்கையில் முக்கியத்துவம் பெற்றது. அப்போது முதலே அவரது அரசியல் பாதையின் அடிச்சுவடு பல்வேறு குத்துக்கரணங்களைக் கண்டுவந்துள்ளது என்பதுதான் சரித்திரம்.

1981 இல் தமது தாயார் தலைமையிலான ஸ்ரீ. ல. சு. கட்சியிலிருந்து பிய்த்துக் கொண்டு, மைத்திரிபால சேனாநாயக்காவோடு தனி அதிருப்திக்குழு அமைத்த அனுரா அணியினர், தாமே கட்சியின் நிர்வாகிகள் என உரிமை கொண்டாடினர். அதை அடுத்து உண்மையான சுதந்திரக் கட்சியினர் யார் என்பதைத் தீர்மானிப்பதற்கான இழுபறி நீதிமன்றம்வரை சென்றது.

தமது அரசியல் நிலைப்பாட்டை மீண்டும் மாற்றிக் கொண்ட அவர் இரண்டு ஆண்டுகள் கழித்து மீண்டும் தாயாரின் தலைமையை ஏற்றுக் கட்சிக்குள் வந்து இணைந்துகொண்டார். அந்தப் பின்னணியில் 1983முதல் 1988 வரை எதிர்க்கட்சித்தலைவர் பதவியையும் வகித்தார்.

1990களின் முற்பகுதியில் கட்சியின் தலைமை தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குப் பின் யாருக்கு என்ற 'குடும்பச் சொத்துரிமை' பிணக்கு எழுந்தது. அனுராவுக்கும் அக்கா சந்திரிகாவுக்கும் இடையில் மோதல் வலுக்க, அதில் பின்னடைவு கண்டு, கட்சியின் அதிகாரத்தை அக்காவிடம் இழந்த நிலையில், தமது குடும்பக் கட்சியை விட்டு விலகி 1993இல் ஐ. தே. கட்சிக்குத் தாவினார் அனுரா.

அதன்மூலம் முதல் தடவையாக அமைச்சர் பதவி ஒன்றை (உயர்கல்வி அமைச்சர் பதவியை) பெற்றுக்கொண்டார்.

2000ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது ஐ. தே. கட்சியின் எம்.பியாகத் தெரிவான அவர் இரு பிரதான கட்சிகளுக்கும் இடைப்பட்ட ஒருவராகக் கருதப்பட்டு அதன் அடிப்படையில் சபாநாயகரானார்.

2001இல் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பிரவேசம். அதன் பின்னர் உல்லாசப் பயணத்துறை அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் எனப் பல அமைச்சர் பதவிகளை அலங்கரித்தார்.

2005 இறுதியில் தமது சகோதரி சந்திரிகா பண்டாரநாயக்காவைத் தொடர்ந்து அவருக்குப் பின்னர் கட்சிக்குள் முக்கிய அந்தஸ்து நிலையைப் பெறுவதற்காகப் போட்டியிட்ட அனுரா, அப்போட்டியில் மஹிந்த ராஜபக்ஷவிடம் தோல்வியுற்று, கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பதவியைப் பறிகொடுத்தார்.

அதன்பின்பு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி வேட்பாளர் மஹிந்தவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யாமல் ஒதுங்கி நின்றார். மஹிந்த ராஜபக்ஷ அத்தேர்தலில் - அனுரா எதிர்பார்த்தமைக்கு மாறாக - வெற்றியீட்ட, மீண்டும் அவரது அமைச்சரவையில் ஒட்டிக்கொண்டார்.

இந்த மாதம் முற்பகுதியில் இருவருக்கும் இடையிலான கருத்து முரண்பாடு முற்ற, அவரை அமைச்சுப்பதவியிலிருந்து தூக்கிக்கடாசினார் ஜனாதிபதி ராஜபக்ஷ.

ஜனாதிபதியின் அமைச்சரவையை 'கோமாளிகளின் களியாட்டத் திருவிழா' என விமர்சித்து அதிலிருந்து வெளியே வந்தமை தமக்கு மகிழ்ச்சி தருகிறது என்று குறிப்பிட்ட அனுரா, ஐந்து நாட்களுக்குள் மீண்டும் 'பல்டி' அடித்து, ஜனாதிபதியிடம் சரணாகதி அடைந்துவிட்டார்.

இவ்வாறு குத்துக்கரணங்களே தமது அரசியல் பாதையாகக் கொண்ட ஒருவரின் நடவடிக்கை இது என்பதால் மக்களுக்கு இந்த 'அந்தர் பல்டி' அதிசயமாகப் படவில்லை. என்றாலும், என்ன செய்வது, இதையெல்லாம் 'அரசியல்' என்று கருதி பார்த்திருக்க வேண்டிய - சகித்துக் கொண்டிருக்க வேண்டிய - அவலமும் கட்டாயமும் இலங்கை மக்களுக்கு.........!

# திறந்த சந்தையிலும் அதிகூடிய விலையில் அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை

யாழ்ப்பாணம், பெப். 16

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்கள் திறந்த சந்தையில் விற்பனைக்கு விடப்பட்ட போதிலும் அவற்றின் விலைகள் கள்ளச் சந்தையில் விற்கப்பட்ட விலைகளை விடக்குறையவில்லை என்று நுகர்வோர் கவலை தெரிவிக்கின்றனர்.

பொருள்களின் விலைகளில் பெரிதாக எதுவும் மாற்றம் ஏற்படவில்லை எனவும், தொடர்ந்தும் அதிகரித்த விலையிலேயே பொருள்களை வாங்க வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டுக்குக் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட அத்தியாவசியப் பொருள்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனியார் வர்த்தகர்களுக்கும் வழங்கப்பட்டன. இதனை அடுத்து மக்கள் திறந்த சந்தையில் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அரச அதிபர் தெரிவித்திருந்தார்.

பொருள்கள் திறந்த சந்தையில் விடப்பட்ட போதிலும் அவற்றின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்த நிலையிலேயே காணப்படுவதாகவும், விலைக் கட்டுப்பாடின்றிப் பொருள்கள் தனியார் வர்த்தகர்களினால் விற்பனை செய்யப்படுவதால் பண வசதி குறைந்த மக்கள் அவற்றைக் கொள்வனவு செய்வதில் கஷ்ட நிலை தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசியப் பொருள்களான குத்தரிசி, கோதுமை மா, சீனி, தேங்காய் எண்ணெய், பால்மா, சவர்க்காரம், தேயிலை, சலவைத்தூள் ஆகியவற்றின் விலைகளே தொடர்ந்து கூடிய அதிகரித்த விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவித்தனர். (அ-8)

## உயர்தரப்பரீட்சை விண்ணப்பப் படிவங்கள்

யாழ்ப்பாணம், பெப்.16

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு மூன்றாவது தடவையாகத் தோற்றவுள்ள மாணவர்கள், மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவுகளை மேற்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ்.கல்வி வலயத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

எனினும் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று யாழ்.கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (203)

# சிவராத்திரி நிகழ்வுகள்

சிவராத்திரியை முன்னிட்டு குடாநாட்டில் உள்ள சிவாலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் இன்று சிறப்பாக இடம்பெறவுள்ளன.

கீரிமலை நகுலேஸ்வரம் கோயில், சித்தன்கேணி சிதம்பரேஸ்வர் ஆலயம், சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்மன் ஆலயம், நவாலி அட்டகிரி விஸ்வநாத சுவாமி ஆலயம், வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ண லிங்கேஸ்வரர் ஆலயம், காரைநகர் வியாவில் ஐயனார் கோயில், நல்லூர் சட்டநாதர் சிவன்கோயில் ஆகியவற்றில் நான்கு சாமப் பூசை வழிபாடுகள் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகங்கள் அறிவித்துள்ளன. (1-203-135-95-28)

# அனைவருக்கும் சமாதானமும் சிறந்த எதிர்காலமும் மலரட்டும்

## யாழ்.தளபதி சிவராத்திரி தினச்செய்தி

யாழ்ப்பாணம், பெப்.16

சிவராத்திரி தினத்தை ஒட்டி யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி செய்தி ஒன்றை விடுத்துள்ளார்.

சிவனை வழிபடும் யாழ். இந்து பக்தர்கள் பிரார்த்திப்பதும், நாட்டின் ஏனைய மதத்தவர்களும் தமது மத அனுட்டானங்களின்படி வேண்டுவதும் ஒரே பிரார்த்தனையே ஆகும். நம் நாட்டில் வாழும் சமூகங்களின் சமய கலாசார வழிபாடுகள் வேறுபட்டாலும் அவர்களுக்குள் உள்ள கருத்துகள், எண்ணங்கள் பிணைந்திருப்பது அவர்களின் சகோதரத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இன்று நீங்கள் கொண்டாடும் மகா சிவராத்திரியின் பயனால் உங்கள் மேன்மையான எண்ணங்கள் நிறைவேறி, உங்கள் வாழ்வு சௌபாக்கியமுள்ளதாக ஆகுவதற்கு சிவனின் அருளால் அனைவருக்கும் சமாதானமும் சௌபாக்கியமும் நற்சுகமும் நீண்ட ஆயுளும் சிறந்த எதிர்காலமும் மலர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் - என்று அவரது சிவராத்திரிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நடமாடும் ஆய்வுகூட சேவை

சுகாதாரத் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தின் நடமாடும் மருத்துவ ஆய்வுகூட சேவை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் 5 வைத்தியசாலைகளில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை அச்சுவேலி வைத்தியசாலையிலும், எதிர்வரும் 20ஆம் திகதி சங்கானை வைத்தியசாலையிலும், 21ஆம் திகதி காரைநகர் வைத்தியசாலையிலும், 22 ஆம் திகதி கோப்பாய் வைத்தியசாலையிலும், 23ஆம் திகதி ஊர்காவற்றுறை வைத்தியசாலையிலும் இச்சேவைகள் நடைபெறவுள்ளன. (1-202)

## சைவப்புலவர் நிகழ்வு

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கவிரும்புவோர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை, தலைவர், அ.இ.சை.ச, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.சிறைச்சாலையில் இடநெருக்கடி அமைச்சரிடம் நேரில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்.சிறைச்சாலையில் கைதிகள் தடுத்து வைப்பதற்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாக நேற்றுமுன்தினம் குடாநாட்டுக்கு வந்த இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் தெரியப்படுத்தியதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் சட்ட ஆலோசகர் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் கடந்த ஒக்ரோபர் மாதத்தின் பின்னர் கொலை அச்சுறுத்தல் காரணமாக சரணடைபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைபவர்கள் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றச் செயல்கள் தொடர்பாக 120க்கும் மேற்பட்டவர்கள் ஏற்கனவே சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அந்த நிலையில் தற்போது கொலை அச்சுறுத்தல் காரணமாக சரணடைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கின்றது.

குடாநாட்டில் இதுவரை 64க்கும் மேற்பட்டவர்கள் உயிருக்கு அஞ்சி மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளனர் - என்று சட்ட ஆலோசகர் எம்.றெமீடியஸ் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-4)

# சாவகச்சேரியில் மாதா சிலையிலிருந்து இரத்தம் கசிவு

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் வேளாங்கன்னி மாதா சொரூபத்தில் இருந்து இரத்தம் கசிவதைப் பார்ப்பதற்காகப் பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடினர்.

குறிப்பிட்ட வீட்டில் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருந்த மாதா சிலையின் கண்களில் இருந்து நேற்று நண்பகல் சிவப்பாக கண்ணீர் கசிய ஆரம்பித்ததாக அறியப்படுகிறது.

அங்கு சென்று மிகச் சமீபமாகப் பார்த்தபோது கண்ணில் இருந்து சிவப்பு நிறமாக நீர் கசிவதைக் காண முடிந்தது. இந்தச் சொரூபத்தை வீட்டிற்கு அண்மையில் அமைந்துள்ள புனித லிகோரியார் தேவாலயத்தில் வைப்பதற்கான ஏற்பாடுகள் நேற்று மாலையில் மேற்கொள்ளப்பட்டன.

# 50 சி.சி. மோட்டார் சைக்கிள்களை மார்ச் 31 க்கு முன் பதியுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.16

குடாநாட்டில் பாவனையிலுள்ள - இதுவரை பதிவு செய்யப்படாத 50 சி.சிக்கு உட்பட்ட மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்வதற்கான கால எல்லை மார்ச் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

''பெடல்'' மட்டும் உள்ள மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் தத்தம் பிரதேசத்துக்குரிய உள்ளூராட்சி சபைகளில் இவ்வருடத்திற்கான உரிமத்தைப் பெற்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்தில் அடுத்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவை மேற்கொள்ளலாம்.

50 சி.சிக்கு உட்பட்ட பெடல் இல்லாததும் பெடலுடன் 'கிக்கர்' உள்ளதுமான மோட்டார் சைக்கிள்களுக்கு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் தாமதங்களைக் கருத்திற்கொண்டே பதிவு திகதியை எதிர்வரும் 31ஆம் திகதிவரை நீடித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட திகதிக்குள் பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிள்களுக்குரிய எரிபொருள் விநியோகம் முற்றாக நிறுத்தப்படும் என்றும் - பதிவு செய்யாது வாகனங்களை வீதியில் செலுத்துவது தண்டனைக்குரிய குற்றம் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

## நாளை

மாசி- 05
சனிக்கிழமை
17.02.2007
திதி: அமாவாசை
பின்னிரவு : 10.51
நட்சத்திரம் : அவிட்டம்
பின்னிரவு : 02.14
சுபநேரம் : 03.33 - 05.03
ராகுகாலம் : 09.33 - 11.03

# வலி- தென்மேற்குப் பகுதியில் மின்தடை தொடர்கின்றது

வலிகாமம் தெற்கு மற்றும் தென்மேற்குப் பகுதிகளில் தினமும் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர்ச்சியான மின்வெட்டுக் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

சங்கானை, சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, இளவாலை, மாதகல் ஆகிய பகுதிகளிலேயே இந்த மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சில வாரங்களாக தினமும் மாலை 6 மணியில் இருந்து இரவு 8 மணிவரையும், காலை 6 மணிமுதல் 7 மணி வரையும் இந்த மின்வெட்டு நாள் தவறாமல் மேற் [illegible] கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டின் ட்டிச் செய்திகள் யாழ்ப்பாணம்

# வெளிமாவட்ட அரச ஊழியர் நேர்முக விசாரணை நாளை

யாழ்ப்பாணம், பெப்.16

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள வெளிமாவட்டத்தில் பணிபுரியும் கல்விசாரா அரச அலுவலர்களுக்கான நேர்முக விசாரணைநாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

## மதிப்பளிக்கும் விழா

தென்மராட்சி, பெப்.16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 2006ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இந்நிகழ்வுக்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர். (1)

## நால்வரைக் காணவில்லை; ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.16

குடாநாட்டில் கடந்த இரு தினங்களில் நான்கு பேரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வேலணை மேற்கைச் சேர்ந்த மார்க்கண்டு ஜனார்த்தனன் (வயது35) என்பவர் நேற்றுக் காலை 10 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டுப் பருத்தித்துறைக்குச் சென்றார் என்றும் - அதன் பின் காணாமற்போனார் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாயன்மார்கட்டு, நல்லூரைச் சேர்ந்த சற்குணநாதன் சுஜீதன் (வயது24), அனலைதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சண்முகராஜா சுபாஸ்கரன் (வயது29) நாவலர் வீதி நல்லூரைச் சேர்ந்த சபாரத்தினம் சதீஸ் (வயது27) ஆகியோர் புதன்கிழமையன்று காணாமற் போயுள்ளனர் என்று முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-1)

## மருந்தக உரிமையாளர்களுக்கு திங்களன்று கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மருந்தகத்தில் இருந்து விற்பனைக்கு மருந்துகளை பெற்றுக் கொண்ட மருந்தக உரிமையாளர்களுக்கான சந்திப்பு ஒன்று நடைபெற உள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட மருந்தக உரிமையாளர்களை இச்சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (1-202)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி விரிவுரைகள்

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்.பல்கலைக்கழக கல்வித் துறைப் பட்டப்பின் கல்வி டிப்ளோமோ கற்கை நெறிகள் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் இதனை அறிவித்துள்ளார்.

முழுநேரக் கற்கைநெறி விரிவுரைகள் அன்றைய தினமும், பகுதி நேரம் I இன் விரிவுரைகள் எதிர்வரும் 24ஆம் திகதியும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (1-203)

## கல்வியியல் கல்லூரி சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் 1ஆம், 2ஆம் அணி மாணவர்களில் இதுவரை சான்றிதழ்களைப் பெறாதவர்கள் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரியின் பீடாதிபதி கேட்டுள்ளார். (202)

# சு.கவை மீட்க ஜனநாயக வழிப்போரட்டம் உள்ளிருந்து நடத்தப்போவதாக மங்கள, சிறிபதி நேற்று சூளுரை

கொழும்பு, பெப்.16

'ராஜபக்ஷ பிறதர்ஸ் அன்ட் கோ' விடமிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீட்டு ஜனநாயக வழியில் இட்டுச் செல்வதே எமது நோக்கம். இதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பத்துக் கோரிக்கைகளை இன்று முன்வைக்கின்றோம். இவற்றை நிறைவேற்றினால் நாம் பின்வரிசை எம்.பிக்களாக இருந்து ஸ்ரீல.சு. கட்சியைக் காப்பாற்றுவோம். நாம் அமைச்சர் பொறுப்புகளை எதிர்பார்க்கமாட்டோம்.

- அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்ட மங்கள சமரவீர எம்.பி. நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார். சிறிபதி சூரியராச்சி எம்.பியும் இந்தச் செய்தியாளர் மாநாட்டில கலந்துகொண்டார்.

நேற்று நண்பகல் நடந்த இந்தச் செய்தியாளர் மாநாட்டில் மங்கள சமரவீர எம். பி தொடர்ந்து கூறியதாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது சகோதரர்களினதும் உறவினர்களினதும் பிடியில் சிக்கிச் சிறைவைக்கப்பட்டுள்ளார்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் அல்லர் இங்கு ஆட்சியை முன்னெடுப்பவர்கள். ஸ்ரீ.ல.சு. கட்சியையும் அரசையும் மூவர் அணியான 'ராஜபக்ஷ பிறதர்ஸ் அன்ட் கோ' வே நிர்வகிக்கின்றது. ஒரு வருடத்துக்கு முன்னரேஎம்மை வெளியேற்றும் சூழ்ச்சி ஆரம்பமானது. கடந்த ஓகஸ்ட் - செப்டெம்பர் மாதங்க ளில் அது உக்கிரம் பெற்றது. இப்போது அது நிறைவேறியுள்ளது.

நான் சிங்கப்பூர் சென்றிருந்தபோதே எனது அமைச்சுப் பொறுப்புகளை நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பறித்தார். அவருக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியைப் பெற்றுக்கொடுக்க நான் கடுமையாக உழைத்தேன்.

அமைச்சுப் பொறுப்புகள் பறிக்கப்பட்டு ஒருசில மணித்தியாலங்களுக்குள்ளேயே எனது பாதுகாப்பு முழுவதுமாக வாபஸ் பெறப்பட்டது. நான் விடுதலைப்புலிகளின் முக்கிய இலக்காக வுள்ளேன். அவர்களது கொலைப்பட்டியலில் எனது பெயரே முதலாவதாக இருக்கின்றது. அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டதால் புலிகளின் இலக்கிலிருந்து நான் தப்பிவிட்டேன் என அர்த்தம் கொள்ளக்கூடாது - என்றார்.

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் குறிப்பிட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று கைதுசெய்துள்ளனர்.

இரகசியப் பொலிஸாருடன் ஏற்கனவே இரகசியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் மூவருள் ஒருவரான தொழிற்சங்கவாதி நிஹால் சேரசிங்க என்பவரும் உடன் வந்திருந்தார் என்று கூறப்படுகிறது.

இராகலையைச் சேர்ந்த தமிழ் பெண் ஒருவரை திருமணம் செய்தவரான நிஹால் சேரசிங்க கொடுத்த தகவலின் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்படுள்ள மூவரும் புதிய ஜனநாயகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள். மனித உரிமை மீறல், மேல் கொத்மலை மின் திட்ட எதிர்ப்பு தொடர்பான ஆர்ப்பாட்டங்களில் தீவிரமாகக் கலந்துகொண்டவர்கள். (க)

## சரண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் கூறப்பட்டது. அதனால் தமக்கு ஏற்படக்கூடிய சிரமங்கள் குறித்தும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பான தகவல் யாழ். நீதிவான் இ.த.விக்னராஜாவின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது.

இந்த விடயத்தை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவின் கவனத்துக்கு அவர் உடன் கொண்டுவந்தார்.

அதனை அடுத்து - யாழ்ப்பாணத்தில் சரண் அடைந்தவர்களை தெற்கில் உள்ள புனர்வாழ்வு நிலையம் எதற்கும் அனுப்ப வேண்டாம் என்றும் -

அவர்களை யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு நிலையம் அமைத்துப் பராமரிக்க ஏற்பாடு செய்யும்படியும் - பிரதம நீதியரசர் புனர்வாழ்வு ஆணையாளர் சுகத் கம்லத்துக்கு நேற்று உத்தரவிட்டார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ்.பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் ஏற்கனவே சரண் அடைந்த 64 பேர் யாழ்.நீதிமன்ற உத்தரவின் பேரில் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## நாட்டைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ இத்தகவலைத் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கும் பயங்கரவாதத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் புலிகளுக்கு வாய்ப்பாக அமைந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு இம்மாதம் 22ஆம் திகதியுடன் ஐந்து வருடங்கள் நிறைவடைகின்றன.

இந்த நாட்டின் நலன்கருதி இந்த தேசத் துரோக ஒப்பந்தத்தை உடனடியாகக் கிழித்தெறிய வேண்டும் என்று அந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட நாளில் இருந்து கூறிவருகிறோம். எதுவும் நடக்கவில்லை.

இந்த ஒப்பந்தம் பிழையானது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார். அதை விமர்சித்து சர்வதேச ஊடகங்களுக்குக் கருத்தும் தெரிவித்துள்ளார்.

தேசத்துக்கு எதிராக இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது என்று ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார் என்பது உண்மை என்றால் இன்னும் ஏன் அவர் அந்த ஒப்பந்தத்தை வைத்து அழகுபார்க்கிறார்? உடனடியாகக் கிழித்தெறிய வேண்டியதுதானே!

இந்த நாட்டில் எத்தனையோ ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அந்த ஒப்பந்தங்கள் எதிலும் சர்வதேச நாடுகள் தலையிட்டதில்லை. அதனால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் மாத்திரம்தான் நோர்வே போன்ற சர்வதேச நாடுகள் தலையிடுகின்றன. இந்த நிலைமை எமது நாட்டுக்கு நல்லதல்ல. புலிகளின் பயங்கரவாதம் நாட்டில் மேலும் அதிகரிக்கவே இச்சர்வதேச நாடுகளின் தலையீடு வழிவகுக்கும்.

இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்ட ஐக்கிய தேசிய கட்சியால் இரண்டு வருடங்களுக்குமேல் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை.

அக்கட்சியில் இருந்து பெருந்தொகையான உறுப்பினர்கள் அரசின் பக்கம் போய் சேர்ந்தபின்பும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதுபற்றியே ரணில் விக்கிரமசிங்க பேசி வருகின்றார்.

இந்த நிலையில் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து அதைக் கிழித்தெறியக் கோரி நாம் இம்மாதம் 22 ஆம் திகதியை நாட்டைக் காட்டிக் கொடுத்த தினமாக அனுஷ்டித்து அன்றைய தினம் கொழும்பு ஹைட்பார்க்கில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றையும் நடத்தவுள்ளோம். - என்றார். (ஐ)

## கொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த ஆபத்தான நிலையில் எனது பாதுகாப்பும் நீக்கப்பட்டுள்ளது. எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் இந்த அரசே அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும்.

இது தொடர்பாக நான் ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்துக்கும் முறைப்பாடு செய்துள்ளேன். நீக்கப்பட்ட எனது பாதுகாப்பை உடனடியாக வழங்குமாறு நான் அரசிற்கு வேண்டுகோள் விடுக்கின்றேன். - என்றார். (ஐ)

## பஸ்களுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுத்த முடியும்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் பஸ்களுக்கான உதிரிப்பாகங்கள் கிடைக்காத போதிலும் இருந்த வளங்களைக் கொண்டு சேவையை நடத்திவந்தோம்.

வழமையான சேவைகளை சீராக மேற்கொள்வதற்கு புதிதாக 50 பஸ்களும், தற்சமயம் சேவையில் உள்ள பஸ்களுக்கான உதிரிப்பாகங்களும் தேவை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கும் அரச அதிபருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம் - என்றும். பொது முகாமையாளர் விவரித்தார். (அ-1-4)


**சக்தி கல்வி நிலையம்**

ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

'வானமே வணிகத்தின் எல்லை'

**வணிகக்கல்வி**

By: S.K.Balasabesh

2007, 2008, 2009 A/L Day Class வகுப்புகளும் 2007 ஆம் ஆண்டுக்கான மீட்டல் வகுப்புகளும் நடைபெறுகின்றன. (58215)

**PERSONAL CLASSES**

364, Stanly Rd., Jaffna

தமிழ் - தர்மராஜா

B.A. final (p) - 8-9 a.m.

G.A.Q. 2008(p) 3-4 p.m.

A/L-2007 9-10 a.m.

A/L -2008 11-12 a.m.

ECO. - பிரதீபன்

G.A.Q. 2007(Ja) paper 2-3p.m

A/L 2007, 2008, 2009

Pol.Sci. -பொன்சந்துரு

A/L, G.A.Q., B.A. I, B.A.final

Engilsh - Maheswaran

G.A.Q. - 2007(Ja) Paper - 12-1

B.A. Part I - 1 - 2p.m.

வசதிக்கேற்ப நேர அட்டவணை

ஆரம்பம் - நாளை 17.02.2007 காலை 8 மணி சனி (58242)


## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிட்ட அவர், கிழக்கில் அண்மையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் மீது அரசுப் படைகள் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கை காரணமாக சர்வதேச அளவில் அரசு மீது கண்டனம் எழுந்திருப்பதாகக் கூறப்படுவதை மறுத்தார்.

பயங்கரவாதத்தை ஏனைய நாடுகள் கையாள்வதைப் போலவே இலங்கையும் பின்பற்றுகின்றது.

'டைம் பாம்' வெடிப்பு அல்லது கிளைமோர் குண்டுத்தாக்குதல் அல்லது கைக்குண்டுவீச்சு என்று இராணுவத்தினர் மீது அல்லது பொதுமக்கள் மீது விடுதலைப் புலிகளும் அவர்களது ஆதரவாளர்களும் தாக்குதல் நடத்தாத நாளே இல்லை. என்று கூறும் அளவுக்கு நிலைமை கடுமையாக உள்ளது.

**சமாதான முயற்சிகள் முடிவடையவில்லை**

இலங்கைத் தீவு முழுவதும் புலிகள் தங்களது தற்கொலைக் குண்டுதாரிகளைக் குவித்திருக்கிறார்கள். முழு மத்தியகிழக்குடன் ஒப்பிடுகையில் இது மிக அதிகமானதாகும். இலங்கை அரசு பயங்கரவாதத்தை உறுதியுடனும், கடுமையாகவும் கையாளவுள்ளது. உலக அளவில் பார்த்தால் எந்த ஒரு நாடுமே பயங்கரவாதத்தை சிறு பிள்ளைத்தனமாக அணுகுவதில்லை.

நோர்வே அனுசரணையாளர்களின் சமாதானமுயற்சிகள் முடிவடைந்துவிடவில்லை.

புலிகளைப் பேச்சு மேசைக்கு கொண்டுவருவதற்கான சிக்கலான பணியை நோர்வே தொடர்ந்து முன்னெடுக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. - இவ்வாறு பாலித்த கொஹன்ன மேலும் கூறியிருக்கிறார்.

## விடுதலைப் புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு பிரிட்டனுக்குத் திரும்புவதற்கு முன்னர் செய்தியாளர்களிடம் நேற்றுப் பேசுகையில், மிகுந்த திருப்பமுடைய இந்தத் தகவலை வெளியிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் அமைப்புகளின் பட்டியலில் சேர்த்து, அதனைத் தடைசெய்யப்பட்டுள்ள அமைப்பாக அறிவித்திருக்கும் பிரிட்டன்-

புலிகளுடன் நேரில் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்திருப்பது பெரும் திருப்பமானதும், வியப்புக்குரியதும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

சாகும் தறுவாயில் உள்ள இலங்கையின் சமாதான முயற்சிக்குப் புத்துயிர் அளிப்பதில் பிரிட்டன் அதிக பங்களிப்பை நல்குவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறது.

இருபது வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை உருவாக்குவதற்கு பிரிட்டன் அர்ப்பணிப்புடன் செயற்படும். -

அதன் பொருட்டு விடுதலைப் புலிகளுடன் நேரில் பேசுவது உட்பட சாதகமான எல்லா முயற்சிகளில் அது ஈடுபடத் தயாராக உள்ளது - என்று ஹவெல்ஸ் மேலும் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுகளில் நாம் அதிக பங்களிப்புச் செய்யும் சந்தர்ப்பம் கிடைப்பின் நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைவோம் என்றும் அவர் கூறினார். விடுதலைப் புலிகளுடன் நாம் நேரில் பேச நேர்ந்தால், அது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் - உங்கள் நிலைப்பாடு என்ன- என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நாம் விசேடமாகவும் குறிப்பாகவும் கேட்டிருந்தோம்.

சமாதானத்தைக்கட்டி எழுப்பும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக அது இருக்கும் வரை எங்களுக்கு அதில் ஆட்சேபம் எதுவுமே இல்லை - என்று அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதத்துடன் பேசுவதன் மூலம் சமாதானத்தைக் கட்டி எழுப்புவதற்கு வழி செய்யமுடியும் என்றால் மட்டுமே நாங்கள் அவர்களுடன் பேச விரும்புவது வழக்கம்-

அந்த வகையில், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேசுவதற்கு நாம் தயாராகவே உள்ளோம்- என்று இணை அமைச்சர் ஹவெல்ஸ் விவரித்தார்.

கலாநிதி கிம் ஹவெல்ஸ், வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் தெற்காசிய, மத்தியகிழக்கு, ஆப்கானிஸ்தான் ஆகியவற்றுக்கும் மற்றும் போதைப் பொருள்கள், பயங்கரவாதம், ஆயுதப் பரவல் ஆகியவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள், ஐ.நா. மற்றும் ஐ.நா.மறுசீரமைப்பு போன்ற விவகாரங்களுக்குப் பொறுப்பான இணை அமைச்சராவார்.

அவர் இலங்கை வருவதற்கு முன்னர் தமது வருகையை ஒட்டி விசேட செவ்வி ஒன்றை அளித்திருந்தார்.

அந்த விசேட செவ்வியில் 'சமாதானத்திற்கான போர்' என்ற அணுகுமுறையால் அமைதி திரும்பாது அதுவே எமது அனுபவ பாடம் என்று தெரிவித்திருந்தார்.

சமாதானத்தை அடைவதற்கு யுத்தம் வழியல்ல என்பதே வட அயர்லாந்து விவகாரத்தில் பிரிட்டன் அனுபவம். இலங்கையில் யுத்தம் தொடருமாயின் அது இந்த நாட்டின் மதிப்பை சர்வதேச ரீதியில் குறைத்துவிடும் என்றும் கூறியிருந்தார்.

அவரது விசேட செவ்வி உதயன் 13.02.2007 இதழில் விரிவாக வெளியாகி இருந்தது தெரிந்ததே.

தமது மூன்று நாள் விஜயத்தின் போது அவர் கொழும்பில் அரச அதிகாரிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் பலரையும் சந்தித்திருந்தார்.

மோதல்கள் மீண்டும் வெடித்த கிழக்குப் பகுதிகளுக்கும் இணை அமைச்சர் விஜயம் செய்து அங்குள்ள மக்களிடமும் அவர் பேசினார்.

''புதிய போரினால்'' பாதிப்படைந்த இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களைச் சந்தித்து யுத்தத்தின் விளைவுகளை அவர் மதிப்பீடு செய்தார். (அ)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**A.RANJITH**

(Field Manager)

கடந்த 4 வருடங்களாக எச்.என்.பி. அசூரன்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி வந்த

**அரியநாயகம் ரஞ்சித்**

அவர்கள் கடந்த 14.02.2007 முதல் வெளிக்களமுகாமையாளராக பதவி உயர்வு பெற்றதையிட்டு மனமாரப் பாராட்டுவதுடன் மேலும்பல பதவி உயுர்வு. களைப்பெற வேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.



**B.ALAN HUMER**

(Assit. field Manager)

கடந்த 3 வருடங்களாக எச்.என்.பி. அசூரன்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி வந்த

**பேனாட் அலன்கியுமர்**

அவர்கள் கடந்த 14.02.2007 முதல் உதவி வெளிக்களமுகாமையாளராக பதவி உயர்வு பெற்றதையிட்டு மனமாரப் பாராட்டுவதுடன் மேலும் பல பதவி உயர்வுகளைப்பெற வேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.

Your Loving
Ragional Manager and Sweet team Members,
HNB Assurance Ltd.,
Regional Office, Jaffna

(58241)

**விற்பனைக்கு**

மோட்டோறோலா தொலைபேசி விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு: 021 226 3111

**வெளிக்களப் படங்கள் விற்பனைக்கு**

(SCRAP PICTURE)

ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு உகந்த வாகனங்கள், பறவைகளின் படங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும்பெற்றுக்கொள்ளலாம்.

**பாக்யா காகிதாதிகள்**

121, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.

(58230) 0773056129

**கண்ணீர் அஞ்சலி**



எமது குடும்ப நண்பரும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதி அதிபருமான **க.பத்மகாந்தன்** அவர்களின் பாசமிகு மகன்

**பத்மகாந்தன் சஞ்ஜீத்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

**ரஞ்சனாஸ் புடைவையகம்**
**நவீன சந்தை, சாவகச்சேரி.**

(க-52049)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org